
# ஸ்ரீ குருப்யோ நம:



**‘திராவிடாசாரியார்’** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

# ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஸ்வாமிஜீ தமிழில் இயற்றிய நூல்கள் -

1. **வியாகரணம்** (இலக்கணம்) - ஸ்ரீ வரதராஜரின் லகுசித்தாந்த கௌமுதி லகுலஹரி விளக்கவுரையுடன்

2. **சாங்கியம்** - ஸ்ரீ ஈஷ்வர கிருஷ்ணரின் காரிகைகளும் கௌடபாத பாஷ்யமும், சாங்கிய லஹரி விளக்கவுரையுடன்

3. **யோகம்** - ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களும் வியாச பாஷ்யமும் யோக லஹரி விளக்கவுரையுடன்

4. **தர்க்கம்** - ஸ்ரீ அன்னம்பட்டரின் தருக்க சங்கிரகமும் ஸ்ரீ சந்திரஜ சிங்கரின் பதகிருத்யமும், தர்க்க லஹரி விளக்கவுரையுடன்

5. **பூர்வமீமாம்ஸை** - ஸ்ரீ லௌகாக்ஷி பாஸ்கரரின் அர்த்த சங்கிரகம் அர்த்த லஹரி விளக்கவுரையுடன்

6. **சிவ பஞ்சாக்ஷரி பாஷ்யம்** - ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் பாஷ்யம்

7. **வேதாந்தம்**

- ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரின் நைஷ்கர்ம்யசித்தி சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ கங்காதரேந்திர சரஸ்வதிகளின் சுவாராஜ்யசித்தி த்விதீய சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை வேதாந்த லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாதனா பஞ்சகம் சாதனோபதேஷ லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாந்தோகிய உபநிஷத் பாஷ்யம் முதல் அத்யாயம்

.

ஸ்ரீ குருப்யோ நம:

பதிப்பு - 2006

கிடைக்குமிடம்

**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas

ஸ்ரீ குருப்யோ நம:

( ஆச்சாரியவான் புருஷோ வேத –
குருவை உடையவர் ஞானத்தை அடைகின்றார் )

# लघुसिद्धान्तकौमुदी

## லகுசித்தாந்தகௌமுதீ

गुरुपर्वतमात्मेति मूर्तिभेदविभागिने ।

व्योमवद् व्याप्त देहाय अरुणाचलाय नमः ॥

**குருபர்வதமாத்மேதி மூர்திபேதவிபாகினே**

**வ்யோமவத் வ்யாப்த தேஹாய அருணாசலாய நம:**

குரு என்பதால் பெரிய அதாவது அண்ணா என்றும் பர்வதம் என்பதால் மலை என்றும் அதாவது அண்ணாமலை என்கிற தெய்வமாகவும் மலை ரூபமாகவும் ஆத்மாரூபமாகவும் மூன்று பிரிவாக இருப்பவரை ஆகாயத்தினை போன்று வியாபித்து இருப்பவரான அருணாசலரை வணங்குகிறேன்.

அல்லது

குரு என்பதால் குருவாக என்றும் பர்வதம் என்பதால் மலை என்றும் அதாவது மலைவடிவினன் அல்லது மலைகளின் அரசன் ஈஷ்வரனாகவும் ஆத்மாரூபமாகவும் மூன்று பிரிவாக இருப்பவரை ஆகாயத்தினை போன்று வியாபித்து இருப்பவரான அருணாசலரை வணங்குகிறேன்.

नत्वा सरस्वतीं देवीं शुद्धां गुण्यां करोम्यहम् ।

पाणिनीयप्रवेशाय लघुसिद्धान्तकौमुदीम् ॥

**நத்வா ஸரஸ்வதீம் தேவீம் ஷுத்தாம் குண்யாம் கரோம்யஹம்**
**பாணிநீயப்ரவேஷாய லகுசித்தாந்தகௌமுதீம்**

சுத்தமும் நல்ல குணமுமுடைய சரஸ்வதி தேவியை வணங்கி பாணினியின் அஷ்டாத்யாயியில் ப்ரவேசிப்பதர்க்காக இந்த சிறிய சித்தாந்த கௌமுதியை எழுதுகிறேன்.

மங்களாசரணம் என்கிற வாழ்த்துப்பாடல் முதலில், நடுவில் மற்றும் முடிவில்

எவர் செய்கின்றாரோ அவர் வீர புருஷராகவும், (வீரம்- ஞானம்), ஆயுஷ்மானாகவும் ஆகின்றார். அந்த கிரந்தத்தை படிக்க பெறுபவர்களும், படிப்பிப்பவர்களும் மங்களத்தினை அடைகின்றனர் என்று **பதஞ்சலி** முனிவர் **மஹாபாஷ்யத்தில் 'சமாப்தி காமோ மங்களம் ஆசரேத்'** என்று சாஸ்திர வாக்கியத்தினை கூறியிருப்பதால், மக்களின் இடையில் இது பிரச்சாரம் அடையவும் செய்யப்பட்டது.

## अथ संज्ञाप्रकरणम्

### அத சம்ஜ்ஞா

**अ इ उ ण् ।1 ऋ ऌ क् ।2। ए ओ ङ् ।3। ऐ औ च् ।4। ह य व र ट् ।5। ल ँ ण् ।6। ञ म ङ ण न म् ।7। झ भ ञ् ।8। घ ढ ध ष् ।9। ज ब ग ड द श् ।10। ख फ छ ठ थ च ट त व् ।11। क प य् ।12। श ष स र् ।13। ह ल् ।14।**

அ இ உ ண் - 1 – ரு ல்ரு க் - 2 – ஏ ஓ ங் - 3 – ஐ ஔ ச் - 4 – ஹ ய வ ர ட் - 5 - ல ண் - 6 – ஞ ம ங ண ன ம் - 7 - ஜ ப ஞ் - 8 - க ட த ஷ் - 9 - ஜ ப க ட த ஷ்2 - 10 - க ப ச ட த ச ட ப வ் - 11 – க ப ய் - 12 - ஷ2 ஷ ஸ ர் - 13 – ஹ ல் - 14 –

इति माहेश्वराणि सूत्राण्यणादिसंज्ञार्थानि। एषामन्यन्त्या इतः। हकारादिष्वकार उच्चारणार्थः। लण्मध्ये त्वित्संज्ञकः।

என்பது மகேஷ்வரனிடமிருந்து வந்தது 'அண்' (**अण्**) முதலிய பெயர்களை குறிப்பது. (இது பிரத்யாஹார சூத்திரம் என்றும் கூறப்படுகிறது). இதன் கடைசி 'இத்' (**इत्**) ஆகும். 'ஹ' (**ह**) முதலியவைகளில் உள்ள 'அ' (**अ**) ஆனது உச்சாரணம் செய்வதற்க்காக. 'லண்' – ல் (**लण्**) உள்ள 'அ' (**अ**) ஆனது 'இத்' (**इत्**) என்ற பெயர் உடையது.

=================

➔ 'லண்' (**लण्**) – ன் இடையில் உள்ள 'அ' உச்சாரணத்திற்க்கு அல்ல என்பதும் 'இத்' (**इत्**) என்பதும் **उपदेशेऽजनुनासिक इत्** சூத்திரத்தில் விளக்கப்படும்.மேலும் இதன் பிரயோகம் ர (**रँ**) என்ற பிரத்யாஹாரம் உருவாக்குவதற்கே. இது **उरण् रपरः** சூத்திரத்தில் விளக்கப்படும்.

இங்கு தரப்பட்ட முறை இதுவேயாகும் -

எண்ணிக்கை , சூத்திரம் , சூத்திர எண் , சூத்திர வகை
ஃபார்முலா
அனுவிருத்தி - @ , (எந்த சூத்திரத்திலிருந்து சொற்க்கள் வந்தது
விபக்தி - #, என்ன வேற்றுமை
விருத்தி - * லகு – வில் தரப்பட்ட விளக்கம் , தமிழாக்கம் , வார்த்திகம் {}, உதாஹரணம்.
உதவி விளக்கம்.

**பி சூ** என்றால் பிரகிருத (நடக்கும்) சூத்திரம்.

## 1. हलन्त्यम् 1/3/3 ॥ ( संज्ञा सूत्रम्)

**उपदेश अन्त्यं हल्** => **इत्**

अनुवृत्तिः। @

उपदेशे, इत् 1/3/2।

विभक्तिः। #

उपदेशे [71], अन्त्यम् [11], हल् [11], इत् [11]।

वृत्तिः। *

उपदेशेऽन्त्यं हल् इत् स्यात्। उपदेश आद्योच्चारणम्। सूत्रेष्वदृष्टं पदं सूत्रान्तरादनुवर्तनीयं सर्वत्र ।।

உபதேசத்தில் கடைசி ஹள் (மெய் எழுத்து) **(हल्)** இத் **(इत्)** ஆகின்றது. உபதேசம் என்பது முதலில் உச்சரிக்கப்பட்டது ஆகும். சூத்திரத்தில் இல்லாத பதங்கள் வேறு சூத்திரங்களில் இருந்து கொண்டு வரப்படவேண்டும் எப்பொழுதும்.

=================

➔ சூத்திரங்களில் உள்ள பதங்கள் முழுமையான விளக்கம் தர இயலாதபொழுது மற்ற சூத்திரங்களில் உள்ள பதங்களால் நிறைவுசெய்யப்படும். இந்த சூத்திரத்தில் ஹல் அந்த்யம் என்ற இரண்டு பதங்கள் உள்ளன இவைகள் முழுமையை அடைய மற்ற சொற்கள் அனுவிருத்தி செய்யப்படுகிறது.

அனுவிருத்தி **(अनुवृत्ति)** மூன்று வகைப்படும் -

1. கோ மூத்திர நியாயம் **(गो मूत्र न्याय)** அதாவது மாட்டு மூத்திரத்தினை போன்று சொல் (ற்கள்) தொடர்ந்து ஓடுவது ஒரு குறிப்பிட்ட சூத்திரம் வரையில்.

2. மண்டூக ப்ளுத ந்யாயம் **(मन्डूकप्लुत न्याय)** அதாவது தவளையைப்போன்று தாவி தாவி சொற்கள் செல்வது.

3. சிம்ஹ அவலோகன நியாயம் **(सिंह अवलोकन न्याय)** சிங்கம் செல்லுகையில் திரும்பி நோக்குவது போல சூத்திரத்திலிருந்து சொல்லானது முன்னர் உள்ள சூத்திரத்திர்க்கு செல்வது.

உபதேஷமானது ஆறு வகைப்படும் -

1. மாகேஷ்வர சூத்திரம் - முன்னர் கண்ட பிரத்யாஹார சூத்திரம்
2. தாது பாடம் - வேர்ச்சொர்க்கள்
3. கண பாடம் - சொர்க்கூட்டங்கள்
4. பிரத்யயம் - வேற்றுமை, எச்சம்
5. ஆகமம் - இடைச்சொருகளாக வரும் எழுத்துக்கள்
6. ஆதேஷம் - மாற்றாக வரும் எழுத்துக்கள

சூத்திரங்களானது ஆறு வகைப்படும் -

1. சம்ஞா
2. பரிபாஷா
3. விதி
4. நியமம்
5. அதிதேஷம்
6. அதிகாரம்

## 2. अदर्शनं लोपः 1/1/60 ।। ( संज्ञा सूत्रम्)

**अदर्शनम्  => लोप संज्ञम्**

@ प्रसक्तस्य (स्थानस्य) 1/1/50।

# प्रसक्तस्य [61], अदर्शनं [11], लोप [11], संज्ञं, स्यात्।

* प्रसक्तस्यादर्शनं लोपसंज्ञं स्यात् ।।

இப்போது இருப்பது அல்லது பேசப்படுவது மறைந்து போதல் லோப (लोप) எனப்படும்.

## 3. तस्य लोपः 1/3/9 ।। (विधि सूत्रम्)

इत्  => लोपः

@ तस्य -- इत् 1/3/2।

# तस्य [61], इत् [61], लोपः [11], स्यात्।

* तस्येतो लोपः स्यात्। णादयोऽणाद्यर्थाः ।।

அதனுடைய இத் (इत्) ஆனது லோபம் (लोप) ஆகட்டும். ண (ण) முதலியவையோ அண் (अण्) முதலிய பிரத்தியகாரங்கள் செய்வதற்காக.

4. आदिरन्त्येन सहेता 1/1/71 ।। (संज्ञा सूत्रम्)

आदि  + …. + अन्त्यम्  =>  संज्ञा

@ स्वस्य (स्वम्) 1/1/68 ।

# आदि [11], अन्त्येन [31], इता [31], सह [0], स्वस्य [61]

* अन्त्येनेता सहित आदिर्मध्यगानां स्वस्य च संज्ञा स्यात्। यथाऽणिति अइउ वर्णानां संज्ञा। एवं अच् हल् अल् इत्यादयः ।।

கடைசி இத் (इत्) -வுடன் சேர்ந்த முதலில் உள்ள எழுத்து தனக்கும் மற்றும் நடுவில் உள்ளதற்க்கும் இப்பெயர் ஆகும். (பிரத்தியஹாரம்). எப்படி அண் (अण्) என்பது அ, இ, உ எழுத்துக்களின் பெயர் ஆகின்றதோ.

அப்படியே அச், அல், ஹல் (अच् ,अल् , हल्) ஆகியவைகளும் ஆகும்.

5. ऊकालोऽज्झ्रस्वदीर्घप्लुतः 1/2/27 ।। (संज्ञा सूत्रम्)

1, 2, 3 मात्रा => ह्रस्व, दीर्घ , प्लुत संज्ञा

# ऊकालो 11, अच् 11, ह्रस्वदीर्घप्लुत 11 । वां – उ 61 वः – उ 11 ।

* उश्च ऊश्च ऊ3श्च वः। वां काल इव कालो यस्य सोऽच् क्रमाद् ह्रस्वदीर्घप्लुतसंज्ञः स्यात्। स प्रत्येकमुदात्तादिभेदेन त्रिधा ।।

உ, ஊ, ஊ3 வாம் (उ, ऊ, ऊ3 व ) ஆகட்டும் அந்த வாமுடைய காலத்தை போல எதனுடைய காலமோ, அந்த அச் (உயிர் எழுத்து) கிரமமாக ரஸ்வம் (குறில்) தீர்க்கம் (நெடில்) ப்ளுத்தம் (விளி) ஆகிய பெயர்களை அடைகிறது.

ஒவ்வொன்றும் உதாத்தம் முதலிய வேறுபாட்டினால் மூன்று வகைப்படுகின்றது.

6. उच्चैरुदात्तः 1/2/29 ।। (संज्ञा सूत्रम्)

उच्चैः (Acute) => उदात्त संज्ञा

@ अच् – 1/2/27 ।

# उच्चैः 0,उदात्तः 11,अच् 11 ।

விதிக்கப்பட்ட ஸ்தானத்தில் இருந்து அதன் மேல் பாகத்தில் உச்சரித்தால் அது உதாத்தம் ஆகும்.

7. नीचैरनुदात्तः 1/2/30 ।। (संज्ञा सूत्रम्)

**नीचैः** (Grave) => **अनुदात्त संज्ञा**

@ अच् – 1/2/27 ।

# नीच्चैः [0], अनुदात्तः [11], अच् [11] ।

விதிக்கப்பட்டதில் இருந்து கீழ் பாகத்தில் உச்சரித்தால் அது அனுதாத்தம் என்று பெயர்.

8. समाहारः स्वरितः 1/2/31 ।। (संज्ञा सूत्रम्)

**समहारः** (Circumflex) => **स्वरितः संज्ञा**

@ अच् – 1/2/27, उदात्तः – 1/2/29, अनुदात्तः 1/2/30।

# उदात्तत्वानुदात्तत्वयोः [62], समाहारः [11], अच् [11],स्वरितः [11]।

* स नवविधोऽपि प्रत्येकमनुनासिकत्वाननुनासिकत्वाभ्यां द्विधा ।।

உதாத்தம் அனுதாத்தம் ஒன்றாக சேர்ந்து சொன்னால் அது ஸ்வரித்தம் ஆகும்.

(அல்லது) விதிக்கப்பட்ட ஸ்தானத்தில் சொல்வது ஸ்வரித்தம்.

அந்த ஒன்பது வகையும் ஒவ்வொன்றும் அனுநாசிக்கம் அனனுநாசிக்கம் என்று இரு வகைப்படும்

➔ अ ரஸ்வம் (குறில்) தீர்க்கம் (நெடில்) ப்ளுத்தம் (விளி) -- 3
உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரித்தம -- 9
அனுநாசிக்கம் அனனுநாசிக்கம்– 18

9. मुखनासिकावचनोऽनुनासिकः 1/1/8 ॥ (संज्ञा सूत्रम्)

**मुख + नासिका** => **अनुनासिकः संज्ञा**

# मुखनासिकावचनः [11], अनुनासिकः [11] ।

* मुखसहितनासिकयोच्चार्यमाणो वर्णोऽनुनासिकसंज्ञः स्यात्। तदित्थं - अ इ उ ऋ एषां वर्णानां प्रत्येकमष्टादश भेदाः। लृवर्णस्य द्वादश तस्य दीर्घाभावात्। एचामपि द्वादश तेषां ह्रस्वाभावात् ॥

வாயுடன் , மூக்குடனும் சேர்ந்து உச்சரிக்கப்படும் வர்ணம் அனுநாசிக்கம் என்ற பெயர் அடைகின்றது. வாயினால் மட்டும் உச்சரிக்கப்படுவது அனனுநாசிக்கம் ஆகும்.

அது இப்படி அ, இ., உ, ர்ரு (अ, इ , उ, ऋ) இந்த வர்ணங்களுக்கு

ஒவ்வொன்றிற்கும் பதினெட்டு வகைகள் உண்டு. ர்லு (ऌ) வர்ணர்த்திற்க்கு 12 வகை ஆகும். ஏன் என்றால் இதற்க்கு தீர்க்கம் இல்லை.

ஏச் க்கும் அதாவது ஏ, ஓ, ஐ, ஔ (एच् - ए ओ ऐ औ) இதற்க்கு ஹ்ரஸ்வம் (குறில்) இல்லாததால் பனிரெண்டு வர்ணம் ஆகும்.

10. तुल्यास्यप्रयत्नं सवर्णम् 1/1/9 ॥ (संज्ञा सूत्रम्)

**आस्य ( मुखम् ) प्रयत्नं आभ्यन्तर = बाह्य** => **सवर्ण संज्ञा**

# तुल्यास्यप्रयत्नं [11], सवर्णम् [11] ।

* ताल्वादिस्थानमाभ्यन्तरप्रयत्नश्चेत्येतद्द्वयं यस्य येन तुल्यं तन्मिथः सवर्णसंज्ञं स्यात् (ऋऌवर्णयोर्मिथः सावर्णयं वाच्यम्)। अकुहविसर्जनीयानां कण्ठः। इचुयशानां तालु। ऋटुरषाणां मूर्धा। ऌतुलसानां दन्ताः। उपूपध्मानीयानामोष्ठौ। ञमङणनानां नासिका च। एदैतोः कण्ठतालु। ओदौतोः कण्ठोऽष्ठम्। वकारस्य दन्तोष्ठम्। जिह्वामूलीयस्य जिह्वामूलम्। नासिकाऽनुस्वारस्य।

यत्नो द्विधा आभ्यन्तरो बाह्यश्च। आद्यः पञ्चधा स्पृष्टेषत्स्पृष्टेषद्विवृतसंवृतभेदात्। तत्र स्पृष्टं प्रयत्नं स्पर्शानाम्। ईशत्स्पृष्टमन्थस्थानाम्। ईषद्विवृतमूष्मणाम्। विवृतं स्वराणाम्। ह्रस्वस्यावर्णस्य प्रयोगे संवृतम्। प्रक्रियादशायां तु विवृतमेव। बाह्यप्रयत्नस्त्वेकादशधा विवारः संवारः श्वासो नादोऽघोषो घोषोऽल्पप्राणो महाप्राण उदात्तोऽनुदात्तः स्वरितश्चेति। खरो विवाराः श्वासा अघोशाश्च। हशः संवाराः नादा घोशाश् च वर्गाणां प्रथमतृतीयपञ्चमा यणश्चाल्पप्राणाः। वर्गाणां द्वितीयचतुर्थौ शलश्च महाप्राणाः। कादयो मावसानाः स्पर्शाः। यणोऽन्तस्थाः। शल उष्माणः। अचः स्वराः। ᳲकः, ᳲखः इति कखाभ्यां प्रागर्धविसर्गसदृशो जिह्वामूलीयः। ᳳपः, ᳳफः, इति पफाभ्यां प्रागर्धविसर्गसदृश उपध्मानीयः। अं, अः इत्यचः परौ अनुस्वारविसर्गौ ॥

நாக்கு முதலிய இடங்களும் உள்ளிருந்து செய்யப்படும் முயற்ச்சி ஆகிய இரண்டும் எதற்க்கு, எதனுடன் ஒன்றாக இருக்கின்றதோ அது ஒன்று மற்றொன்றுக்கு ஸவர்ணம் என்ற பெயர் (சமாண வர்ணம்) அடைகின்றது.

{ர்ரு, ல்ரு (ऋ ऌ) என்ற இரண்டு வர்ணங்களுக்கும் ஒன்றுக்கொன்று ஸவர்ணத்தன்மை உள்ளது. } என்பது வார்த்திகம்

அ, கு, ஹ மற்றும் விசர்கத்திற்க்கு (अ, कुँ, ह, ः) கண்டம். கு என்பது

இங்கு குங் என்று அறிய வேண்டும். இப்படி எழுதப்பட்டால் அது முழு, க வர்க ஜாதியையும் குறிக்கும். (உ-ம்)

கு என்பது க, க்க, க், க், ங் ஆகும். இது போலவே மற்றவைக்கும் உண்டு என்று அறிய வேண்டும்.

இ, சு , ய மற்றும் ஷ $_2$ (इ चुँ य श) ஆகியவை உள்நாக்கில் இருந்து.

ர்ரு, டு, ர, ஷ (ऋ टुँ र ष) ஆகியவை மேல் அண்ணத்தில் இருந்து.

ர்லு, துங், ல, மற்றும் ஸ (ऌ तुँ ल स) பற்களின் ஆகியவை

உ, பு (उ पुँ ) மற்றும் உபத்மாணியம் இவைகளுக்கு உதடுகள்.

ஞ, ம, ங, ண மற்றும் ந (ञ म ङ ण மற்றும் न) இவைகள் அவைகளின் சொந்த ஸ்தானத்துடன் மூக்கும் சேரவேண்டும்.

ஏ மற்றும் ஐ (ए ऐ) இவைகள் கண்டத்தில் இருந்தும் உள்நாக்கில் இருந்தும்.

ஒ, ஔ (ओ औ )இவைகள் கண்டத்தில் இருந்தும் உதட்டில் இருந்தும்.

வ காரம் (व) பல் மற்றும் , உதட்டில் இருந்து.

ஜிஹ்வாமூலியம் (ᳵ) நாக்கின் (நுனியில்) இறுதில் இருந்து. ᳵ க, ᳵ க $_2$
அனுஸ்வாரமானது மூக்கில் இருந்து.

முயற்ச்சி இரண்டுவகை, அவை உள் மற்றும் வெளி என்று ஆகும்.

முதல் வகை (ஆப்பியந்த்தரம்) ஐந்து வகைப்படுகின்றது ஸ்பிருஷ்டம், ஈஷத்ஸ்பிருஷ்டம், ஈஷத்விவ்விருத்தம் , விவ்விருத்தம், மற்றும் சம்விருத்தம் என்று ஆகும்.

அங்கு (அவைகளில்) ஸ்பிருஷ்டம் என்கின்ற முயற்ச்சி ஸ்பர்ஷ எழுத்துக்களுக்கு (ஐந்து வர்ணங்களுக்கு) (குங், சுங்,டுங், துங், புங்) (कुँ चुँ टुँ तुँ पुँ )

ஈஷத்ஸ்பிருஷ்டம் ,அந்தஸ்த்த எழுத்துக்களுக்கு. (ய,வ,ர,ல) (य व र

ल)

ஈஷத்விவ்விருத்தம (ஸ, ஷ$_2$, ஷ, ஹ) (स श ष ह) ஊஷ்மாணம் எனப்படும் எழுத்துக்களுக்கு.

விவ்விருத்தம் என்பது ஸ்வரங்களுக்கு. (अ इ उ ऋ ऌ ए ओ ऐ औ)

குறில் ஆன அகாரத்திற்க்கு பிரயோகிக்கும் போது சம்விருத்தம் ஆகும். பிரக்கிரையை செய்யும்பொழுதோ விவ்விருத்தமே.

வெளியில் செய்யப்படும் பிரயேத்தனமோ (முயற்ச்சி) 11 வகைப்படும். விவாரம், சம்வாரம் , ஷ்வாசம், நாதம் , அகோஷம், கோஷம், அல்ப்பப்பிராணன், மகாபிராணன், உதாத்தம், அனுதாத்தம் , ஸ்வரித்தம் ஆகும்.

கர் (खर्) எழுத்துக்களுக்கு விவ்வாரம் , ஷ்வாசம் மற்றும் அகோஷமும்,

ஹஸ் (हश्) எழுத்துக்களுக்கு ஸம்வாரம் , நாதம் மற்றும் கோஷம் ஆகும்.

வர்கங்களில் முதல் மூன்று மற்றும் ஐந்தாவது மற்றும் யண் (यण्) அல்ப்பப்பிராணன் ஆகும்.

வர்கங்களில் இரண்டு, நான்கு மற்றும் ஷ$_2$ள் (शल्) மகாப்பிராணன் ஆகும்.

க முதல் ம வரை (क – म) உள்ள 25 எழுத்தக்களும் ஸ்பர்ஷம் எனப்படும்.

யண் (यण्) எழுத்தக்கள் அந்தஸ்த்தம் எனப்படும்.

ஷ$_2$ள் (शल्) என்ற எழுத்துக்கள் ஊஷ்மானம் எனப்படும்.

அச் (अच्) எழுத்துக்கள் அதாவது உயிர் எழுத்துக்கள் ஸ்வரங்கள் எனப்படும்.

முதல் மற்றும் இரண்டாவது காவின் முன்பு வரும் பாதி விஸர்க்கத்திற்க்கு (ᳵ) சமமானது இதற்க்கு ஜிஹ்வாமூலியம் எனப்படும்.

முதல் மற்றும் இரண்டாவது பாவின் முன்பு வரும் பாதி விஸர்க்கத்திற்க்கு (ᳲ) சமம் இதற்க்கு ஊஷ்மானியம் என்று பெயர்.

அம், அ: , என்று (अं अः ) அச்சினை (अच्) தொடர்ந்து வருவது அனுஸ்வாரம், விசர்க்கம் ஆகும்.

=================

➔ कुँ --> क ख ग घ ङ

11. अणुदित्सवर्णस्य चाऽप्रत्ययः 1/1/69 ॥ (संज्ञा सूत्रम्)

अप्रत्यय अण् & उदित् => **सवर्ण**

@ स्वस्य (स्वम्) 1/1/68 ।

# अण् [11], उदित् [11], सवर्णस्य [61], च [0], अप्रत्ययः [11], स्वस्य [61] ।

* प्रतीयते विधीयत इति प्रत्ययः। अविधीयमानोऽणुदिच्च सवर्णस्य संज्ञा स्यात्। अत्रैवाण् परेण णकारेण। कुँचुँटुँतुँपुँ एते उदितः। तदेवम् - अ इत्यष्टादशानां संज्ञा। तथेकारोकारौ ऋकारस् त्रिंशतः। एवं ऌकारोऽपि। एचो द्वादशानाम्। अनुनासिकाननुनासिकभेदेन यवला दिविधा; तेनाननुनासिकस्ते द्वयोर्द्वयोः संज्ञा ॥

எது மாறாகிறதோ, விதிக்கப்படுகிறதோ (வேறு சூத்திரங்களால்) அது பிரத்யயம் ஆகும். விதிக்கப்படாத அண் (अण्) மற்றும் உத் (उत्) , இத் (इत्) ஆக இருப்பதும் சவர்ணம் எனப்படும்.

இங்கு மட்டுமே அண் (अण्) என்பது பரத்தில் உள்ள (இரண்டாவதாக உள்ளது அதாவது லண் (लँण्) ல் உள்ளது.) ணகாரத்துடன் என்று அறிய

வேண்டும்.

கு, சு, டு, து, பு (कुँ चुँ टुँ तुँ पुँ) ஆகியவை உதித் (उदित्) எனப்படும்.

அது இப்படி அ (अ) என்பது 18 வகைக்கும் பெயர்.

அதுபோலவே இ க்காரத்திற்கும் உ-க்காரத்திற்க்கும் (इ उ) 18 வகை ஆகும்.

ர்ருகாரம் மற்றும் ர்லுகாரத்திற்க்கும் (ऋ ऌ) 30 வகை ஆகும்.

ஏச் க்கு (एच्) 12 வகைப்படும்.

அனுநாசிக்கும் (ம) அனனுநாசிக்கம் என்ற ய , வ மற்றும் ள (य व ल) இரண்டு வகை எனப்படும். அந்த அனனுநாசிக்கையால் அவை இரண்டுக்கும் இரண்டு பெயர்கள்.

12. परः सन्निकर्षः संहिता 1/4/109 ।। (नियम सूत्रम्)

वर्ण + वर्ण => संहिता संज्ञा

# परः [11], सन्निकर्षः [11], संहिता [11]।

* वर्णानामतिशयितः सन्निधिः संहितासंज्ञः स्यात् ।।

வர்ணங்களின் (अच्) அதிசயமான (இடைவெளியற்று நெருக்கமாக) இருப்பது சம்ஹிதா.

13. हलोऽनन्तराः संयोगः 1/1/7 ।। (संज्ञा सूत्रम्)

हल् + हल् => संयोग संज्ञा

# हलः [13], अनन्तराः [13], संयोगः [11] ।

* अज्भिरव्यवहिता हलः संयोगसंज्ञाः स्युः ॥

அச் (अच्) எழுத்துக்களால் (உயிர் எழுத்துக்கள்) பிரிக்கப்படாத ஹல் (हल्) எழுத்து (மெய் எழுத்து) சம்யோகம் அடைகின்றது.

=================

➔ அந்த்யம் (अन्त्यम्) என்ற சொல்லில் ந் த் ய (न् त् य) அச் (अच्) எழுத்துக்களால் பிரிக்கப்படாததால் சம்யோகம் ஆகும்.

14. सुप्तिङन्तं पदम् 1/4/14 ॥ (संज्ञा सूत्रम्)

सुप् अन्तं & तिन्ङ् अन्तं => पद संज्ञम्

* सुबन्तं तिङन्तं च पदसंज्ञं स्यात् ॥

சுப் (सुँप्) விகுதி முடிவாக உள்ளதும் திங் (तिङ्) முடிவாக உள்ளதும் பதம் எனப்படுகிறது.

**சம்ஞா முற்றும்**

**इति संज्ञाप्रकरणम्**

# अथ अच्सन्धि प्रकरणम्

## அத அச்சந்தி

15. इको यणचि 6/1/77।। (विधि सूत्रम्)

इक् + अच् => यण्

@ संहितायां 6/1/72 ।

# इकः [61], याण् [11], अचि [71], संहितायां [71]।

* इकः स्थाने याण् स्यादाचि संहितायां विषये। सुधी + उपास्य इति स्थिते ।।

இக் -ன் (इक्) இடத்தில் யண் (यण्) ஆகும் அச் (अच्) தொடர்ந்து இருக்கும்பொழுது சம்ஹிதா விஷயத்தில் (உயிர் எழுத்து அடுத்து அடுத்து இருக்கும் பொழுது).

சுதீ + உபாஸ்ய என்ற நிலையில்

सुध् + ई + उ + पास्य

16. तस्मिन्निति निर्दिष्टे पूर्वस्य 1/1/66।। (परिभाषा सूत्रम्)

------ + 7 विभक्ति => पूर्वस्य आदेशम्

# तस्मिन् 71, इति 0, निर्दिष्टे 71, पूर्वस्य 61।

* सप्तमीनिर्देशेन विधीयमानं कार्यं वर्णान्तरेणाव्यवहितस्य पूर्वस्य बोध्यम् ॥

ஏழாம் வேற்றுமையால் விதிக்கப்பட்ட காரியமானது இடைவெளி இல்லாத முன்பு இருக்கும் வேறு வர்ணத்தில் என்று அறிய வேண்டும்.

17. स्थानेऽन्तरतमः 1/1/50॥ (परिभाषा सूत्रम्)

सदृशतम स्थानि => आदेश

@ आदेशः 1/1/48 ।

# स्थाने 71, अन्तरतमः 11, आदेशः 11।

* प्रसङ्गे सति सदृशतम आदेशः स्यात्। सुध्य् + उपास्य इति जाते ॥

இந்த இடத்தில் அதிகமான ஒற்றுமை உள்ள ஆதேஷம் ஆகின்றது.

அவை நான்கு வகைப்படும் அவை ஸ்தானத்தினால் பொருளினால் பிரமாணத்தினால் (அளவு) , குணத்தினால்.

சுத் இ உ பாஸ்ய (सुध् + ई + उ + पास्य) என்ற இடத்தில் (இக்) இ, (அச்) உ इक् - ई अच् - उ ம் அடுத்தடுத்து வருவதால் ஸம்ஹிதாவாக (संहिता) இருப்பதால் **இகோ யணசி** (इको यनचि) என்று இக் ன் இடத்தில் யண் (इक् → यण्) வருகின்றது.

அப்படி ஈ (ई ) இடத்தில் யண் (यण्) வரும் பொழுது அதில் மிகவும் சத்ருஷம் உள்ள யகாரம் (**सदृशतम य्** ) (ஆதேஷமாக) பதிலீடாக இடுகின்றோம்.

அப்படியாக ஸுத் ய் உ பாஸ்ய என்று ஆகின்றது.

**सुध्** + **य्** + उ + **पास्य**

18. अनचि च 8/4/47।। (विधि सूत्रम्)

अच् + यर् + **न** अच् => **यर्** + **यर्**

@ अचः 8/4/46, यरः, वा 8/4/45 ।

# अनचि [71], च [0], यरः [61], द्वे [11], वा [0], अचः [51]।

* अचः परस्य यरो द्वे वा स्तो न त्वचि। इति धकारस्य द्वित्वम् ।।

அச் -யை (अच्) தொடர்ந்து யர் (यर्) வரும் பொழுது அது யர் (यर्) இரண்டாகலாம் (விகல்பத்துடன்) . அச் (अच्) தொடர்ந்து வராதபொழுது என்று அறியவும். (த இரண்டாகின்றது) .

அச் -ல் (अच्) உள்ள உ (उ) -வை தொடர்ந்து யர் -ல் (यर्) உள்ள த (ध् ) வருகின்றது. இதை தொடர்ந்து யகாரம் (य् ) வருகின்றது. இது அச் -ல் இல்லாததால் த (யர்) ஆனது இரண்டாகின்றது. இது **அனசி ச** (अनचि च) சூத்திரத்தின் படி

स् + उ + ध् + य् + उपास्य

சூத்திரத்தில் உள்ள வா என்பது விகல்பத்தை குறிக்கின்றது. அதாவது ஆகலாம் , ஆகாமலும் இருக்கலாம் என்பது ஆகும்.

(உ-ம்)

ஆகலாம் स् + उ + ध् + ध् + य् + उपास्य

ஆகாமலிருக்கலாம் स् + उ + ध् + य् + उपास्य

## 19. झलां जश्झशि 8/4/53।। (विधि सूत्रम्)

झल् + झश् => जश्

@ संहितायां 6/1/72 ।

# झलां [63], जश् [11], झशि [71], संहितायाम् [71] ।

* स्पष्टम्। इति पूर्वधकारस्य दकारः ।।

தெளிவாக இருக்கின்றது (சூத்திரத்திலேயே தேவையான சொற்கள் உள்ளதால் வேறு அனுவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**இகோ யணசி** யை போல 6 ஆம் வேற்றுமை ஜல் (இக்) 1 ஆம் வேற்றுமை ஜஸ் (யண்) 7 ஆம் வேற்றுமை ஜஸ் (அசி) ஆகும்.

ஸு த் த் ய் உபாஸ்ய (स् + उ + ध् + य् + उपास्य) என்ற நிலையில்

**ஜலாம் ஜஷ் ஜஸி** (झलां जश् झशि) என்ற சூத்திரத்தினால் ஜல் ஆன $த_4$ ஆம்

ஜஸ் த்$_4$ தை (झल् ध् जश् ध्) தொடர்ந்து வரும் பொழுது ஜல் ஆன த்$_4$ ம் ஜஸ் ஆன த்$_3$ மாக (झल् ध् जश् द्) மாறும்.

ஸு த்$_3$ த்$_4$ ய் உபாஸ்ய स् + उ + द् + ध् + य् + उपास्य

वा

ஸு த்$_4$ ய் உபாஸ்ய स् + उ + ध् + य् + उपास्य

20. संयोगान्तस्य लोपः 8/2/23।। (विधि सूत्रम्)

सम्योगन्तस्य पदस्य => लोपः

@ पदस्य 8/1/16।

# संयोगान्तस्य [61], पदस्य [61], लोपः [11]।

* संयोगान्तं यत्पदं तस्य लोपः स्यात् ।।

எந்த பதத்தின் கடைசியில் சம்யோகம் உள்ளதோ அதனின் லோபம் உண்டாகட்டும்.

சம்யோகம் என்பது இரண்டு மெய் எழுத்து அடுத்து அடுத்து உள்ள போது. பதம் **சுப்திங் அன்தம் பதம்** ஆகும்.

என்ற படியால் ஸு த்$_3$ த்$_4$ ய் (स् + उ + द् + ध् + य् ) மற்றும் ஸு த்$_4$ ய் உபாஸ்ய (स् + उ + ध् + य् )என்ற நிலையில் த$_4$ காரம் ய் வும் த்$_3$ மற்றும் ய் சம்யோகத்தில் உள்ளது என்பதால் இந்த சூத்திரத்தின் மூலம்

முழுப்பதமும் (ஸு த் த் ய், ஸு த்ய்) (स् + उ + द् + ध् + य् । स् + उ + ध् + य् ) லோபம் ஆகும் நிலையில்

அடுத்த சூத்திரம் அதனை தெளிவுபடுத்துகின்றது.

## 21. अलोऽन्त्यस्य 1/1/52 ॥ (परिभाषा सूत्रम्)

**षष्ठीनिर्दिष्ट (स्थान) अन्त्य अल् वर्णस्य** => **आदेशः**

@ षष्ठी, स्थाने 1/1/49, आदेशः 1/1/48।

# स्थाने [71], षष्ठया [31], (निर्दिष्टस्य [61],) अन्त्यस्य [61], अलः [61], आदेशः [11]।

* षष्ठीनिर्दिष्टस्यान्त्यस्यालः आदेशः स्यात्। इति यलोपे प्राप्ते (यणः प्रतिषेधो वाच्यः) सुद्ध्युपास्यः, सुध्युपास्यः। मद्ध्वरिः, मध्वरिः। धात्त्रंशः, धात्रंशः। लाकृतिः ॥

ஆறாம் வேற்றுமையில் குறிக்கப்பட்ட கடைசி அல்-ல் (உயிர் மற்றும் மெய் எழுத்து) ஆதேசம் ஆகும்.

என்றால் ய லோபம் உண்டாகும் பொழுது.

**வார்த்திகம்**

யண் (य व र ल) தடை என்று சொல்ல வேண்டும்.

அப்படி என்றால் ஸம்யோகம் அன்தத்தில் உள்ள யண் (**यण्**) லோபம் ஆகாது.

ஸம்யோகா அன்தஸ்ய (संयोगान्तस्य) உள்ளதால் **ஸம்யோக அன்தஸ்ய லோபம்** சூத்திரத்தினால் பதம் முழுவதும் லோபம் ஆகும் நிலையில் **அலோ அன்தயஸ்ய** (अलोऽन्त्यस्य) சூத்திரத்தினால் கடைசி எழுத்துக்கு மட்டும் ஆதேசம் நடக்கும் என்றது. இந்த விதியினால் யகாரமானது லோபம் ஆகும். ஆனால் **யண ப்ரதிஷேதோ வாச்ய** என்ற வார்த்தினால் யகார லோபம் தடை செய்யப்படுகின்றது.

இந்த நிலையில் அச் ஹீனம் பரேண ஸம்யோஜ்யம் என்ற நியமப்படி யகாரம் உ-வுடன் சேர்வதால்

ஸுத் $_3$ த் $_4$ யூபாஸ்ய , ஸுத $_4$ யூபாஸ்ய

सुद्ध्युपास्य ॥ सुध्युपास्य ॥

உதாரணம்

1. மது அரி - मधु अरिः

म ध् उ अ रिः

இகோ யணசி (इको यणचि) -யின் படி

म ध् व् अ रिः

म् अ ध् व् अ रिः

அனசி ச (अनचि च) சூத்திரத்தின் படி இங்கு

ஆகும் म् अ ध् ध् व् अ रिः

ஆகாது म् अ ध् ध् व् अ रिः

ஜலாம் ஜஷ் ஜஸி (झलां जश् झशि) சூத்திரத்தின் படி அடுத்து.

म् अ द् ध् व् अ रिः

இங்கு அடுத்து அடுத்து மெய் எழுத்து வருவதால் ஸம்யோகம் உள்ளது. இந்த **(ஸம்யோகந்தஸ்ய லோப)** சூத்திரத்தின் படி பதம் லோபம் ஆகும்.

ஆனால் அடுத்த சூத்திரம் **அலோ அன்த்யஸ்ய** யில் பதத்தின் முடிவில் தான் ஆதேஸம் ஆக வேண்டும் என்று சொல்லப்படுகிறது. எப்படி என்றால் (யண ப்ரதிஷேதோ வாச்ய) வார்த்திகத்தின் படி ய ர ல வ இவை இருந்தால் லோபம் ஆகாது.

இந்த நிலையில் அச் ஹீனம் பரேண சம்யோஜ்யம் என்ற நியமப்படி ய-ம் உ- வுடன் சேர்கின்றது . (யு)

ரூபம்

1, மத்$_3$த்$_4$வரி **मद्ध्वरिः**

2. மத்$_4$வரி **मध्वरिः**

2. தாத்ரு அம்ஸ - **धातृ अंशः**

**धा त् ऋ अ ं शः**

இகோயணசி படி - **धा त् र् अ ं शः**

அனசிச படி - **ध् आ त् त् र् अ ं शः**

இங்கு **ஜலாம் ஜஸ் ஜஸி** சூத்திரம் வேலை செய்யாது ஏன் எனில் த்$_1$ (ஜல்) உள்ளது ஆனால் அதை தொடர்ந்து வரும் த்$_1$ ஜஸ் ல் இல்லை.

அதனால் அது அப்படியே வரும்

ரூபம்

தாத்ரம்ஸ - **धात्त्रंशः**

3. ல்ரு ஆக்ருதி - ऌ आकृतिः

ऌ आ कृतिः

இகோயணசி படி - ल् आ कृतिः

ரூபம்

லாக்ருதி - लाकृतिः

22. एचोऽयवायावः 6/1/78।। (विधि सूत्रम्)

एच् + अच् => अय् / अव् / आय् / आव्

@ अचि 6/1/77।

# एचः [61], अयवाायााव [13], अचि [71], संहितायाम् [71] ।

* एचः क्रमाद् अय् अव् आय् आव् एते स्युरच् ।।

ஏச் -க்கு (एच्) ஒவ்வொன்றுக்கும் அய், அவ், ஆய், ஆவ் (अय् अव् आय् आव्) ஆகட்டும்.

இங்கு ஏ, ஓ, ஐ, ஔ (अ ओ ऐ औ) இவை ஒவ்வொன்றுக்கும் அய், அவ், ஆய், ஆவ் (अय् अव् आय् आव्) ஆகட்டும் (முறையே) அச் (अच्) தொடர்ந்து வரும் போது.

23. यथासंख्यमनुदेशः समानाम् 1/3/10।। (परिभाषा सूत्रम्)

**स्थानम् = आदेशः** => **यथासंख्यम्**

# यथासंख्यम्[11], अनुदेशः[11], समानाम्[61]।

* समसंबन्धीविधिर्यथासंख्यं स्यात्। हरये, विष्णवे, नायकः, पावकः ।।

ஒரே எண்ணிக்கை உள்ள விதியானது அந்த அந்த எண்ணிற்க்கு முறையாக ஆகும்.

என்பதால் ஏ - க்கு அய் ம், ஓ விற்க்கு அவ் உம், ஐ க்கு ஆய், ஔ க்கு ஆவ் உம் முறையாக வருகின்றது.

உதாரணம்

**हरे ए → ह् अ र् ए ए - एचोऽयवायाव -** வினால் **ह् अ र् अय् ए**

ரூபம் **हरये**

**विष्णो ए → वि ष् ण् ओ ए - एचोऽयवायाव -** வினால் **वि ष् ण् अव् ए** ரூபம் **विष्णवे**

**पौ अकः → प् औ अ कः - एचोऽयवायाव -** வினால் **प् आव् अकः**

ரூபம் **पावकः**

**नै अकः → न् ऐ अ कः - एचोऽयवायाव -** வினால் **न् आय् अकः**

ரூபம் **नायकः**

24. वान्तो यि प्रत्यये 6/1/79।। (विधि सूत्रम्)

**ओ / औ + य् आदि प्रत्ययम् => अव् / आव्**

@ एचः 6/1/78 ।

# वान्तः [11], यि [71], प्रत्यये [71] ।

* यकारादौ प्रत्यये परे ओदौतोर् अव् आव् एतौ स्तः। गव्यम्, नाव्यम्। (अध्वपरिमाणे च) गव्यूतिः॥

ய் -ம் (**य्**) ஆதியாக உள்ள பிரத்தியங்கள் ஒ மற்றும் ஔ -வை (**ओ औ**) தொடர்ந்து வரும் பொழுது முறையே அவைக்கு அவ் மற்றும் ஆவ் (**अव् आव्**) இவை இரண்டும் ஆகும்.

உதாரணம்

**गो यम् → ग् ओ य् अम् - वान्तो यि प्रत्यये -** வினால் **ग् अव् य् अम् -** ரூபம் **गव्यम्**

**नौ यम् → न औ य् अम् - वान्तो यि प्रत्यये -** வினால் **न् आव् य् अम् -** ரூபம் **नाव्यम्**

**<u>வார்த்திகம்</u>** சாலையினை அளக்கும் பொருளிலும் (ஔ ஆனது அவ் ஆகும்).

(உ -ம்) **गो यूतिः → ग् ओ य् ऊ तिः - வார்த்திகம் - ग् अव् यू तिः -** ரூபம் **गव्यूतिः**

இங்கு ய காரமானது ஆதியில் இருந்தாலும் அது பிரத்தியத்தின் முதலில் (ஆதியில்) இல்லை. ஆனால் யூதி என்ற சொல்லின் ஆதியில் உள்ளது.

25. अदेङ् गुणः 1/1/2।। (संज्ञा सूत्रम्)

अत् / ए / ओ => **गुण संज्ञा**

# अत् [11], एङ् [11], गुणः [11] ।

* अतेङ् च गुणसंज्ञः स्यात् ।।

அத் (**अत्**) (அ - **अ**) மற்றும் ஏங் (**एङ्**) (ஏ ஔ - **ए ओ**) இவையும் குணம் என்ற பெயரை அடையட்டும்.

26. तपरस्तत्कालस्य 1/1/70।। (संज्ञा सूत्रम्)

अच् + त् => **समकाल अच्**

@ स्वस्य 1/1/68 ।

* तपरः [11], तत्कालस्य [61], स्वस्य [61] ।

* तः परो यस्मात् स च तात्परश्चोच्चार्यमाणसमकालस्यैव संज्ञा स्यात् ।।

த் (**त्**) எதை தோடர்ந்து உள்ளதோ அது அந்த எழுத்தின் உச்சரிக்கப்படும் மாத்திரைக்கு மட்டும் பெயர் ஆகின்றது. (விதிக்கப்படாத அண் (**अण्**) -னை தொடர்ந்து அ முதல் லண் வரை ) த் இருக்கும் பொழுது அது அதனுடைய மாத்திரையில் (காலத்தினை ) குறிப்பதாக இருக்கின்றது.

(உ-ம்)

அத் (अत्) என்பது உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரித்தம் மற்றும் அனுநாசிக்கம் அனனுநாசிக்கம் இவைகள் கொண்ட குறில் अ யினை, மட்டும் குறிக்கின்றது.

27. आद्गुणः 6/1/87॥ (विधि सूत्रम्)

अ वर्णम् + अच् => **गुणः**

@ आदेशः 1/1/48

* आद्[51], अचि[71], पूर्वपरयोः[62], एकः[11], गुणः[11], आदेशः[11]।

* अवर्णाद् अचि परे पूर्वपरयोर् एको गुण आदेशः स्यात्। उपेन्द्रः। गङ्गोदकम् ॥

அ (अ **वर्णम्**) வர்ணத்தினை தொடர்ந்து அச் (अच्) எழுத்துக்கள் வரும் பொழுது அவை இரண்டிற்க்கும் , குணம் (**गुणः**) ஆனது ஏகாதேசமாக வரும்.

உதாரணம்

1. A = பூர்வம் B = பரம் ஆகும்

A = X எனும்பொழுது புதிய சூத்திரம் X + B ஆகும் . இது பூர்வாதேசம் ஆகும்.

A + B => X

2. B = X என்னும் பொழுது புதிய சூத்திரம் A + X ஆகும் இது

பராதேசம் ஆகும்.

A + B => X

3. A + B = X என்ற நிலையில் புதிய சூத்திரம் வெறும் X ஆகும். இது ஏகாதேசம் எனப்படும்.

A + B => X

உதாரணம்

**उप इन्द्रः** -> **उ प् अ इ न्द्रः** - **गुण** மற்றும் **स्थनेन्तरतमः** வினால் **अ** (கண்டம்) + **इ** (தாலு) = **ए** (கண்டதாலு) - **उप् ए न्द्रः** - **उपेन्द्रः** ஆகும்.

**गङ्ग उदकम्** -> **गङ्ग् अ उ दकम्** - **गुण** மற்றும் **स्थनेन्तरतमः** வினால் **अ** (கண்டம்) + **उ** (ஒஷ்டம்) = **ओ** (கண்டோஷ்டம்) - **गङ्ग् ओ दकम्** - **गङ्गोदकम्** ஆகும்.

## 28. उपदेशेऽजनुनासिक इत् 1/3/2।। (संज्ञा सूत्रम्)

उपदेश अनुनासिक अच् => **इत् संज्ञा**

# उपदेशे [71], अनुनासिकः [11], अच् [11], इत् [11]।

* उपदेशेऽनुनासिकोऽजित्संज्ञः स्यात्। प्रतिज्ञाऽनुनासिक्याः पाणिनीयाः। लण्सूत्रस्थावर्णेन सहोच्चार्यमाणो रेफो रलयोः संज्ञा ।।

உபதேசத்தில் அனுநாசிக்கமான அச் (**अच्**) ஆனது இத் (**इत्**) சங்கியத்தை (பெயரை) அடைகின்றது.

பிரதிக்ஞையால் (சூஞுரை) அனுநாசிக்கமானது பாணிணீ சூத்திரங்களின் (உள்ளது) என்று அறியப்படுகின்றது.

லண் (लँण्) என்னும் சூத்திரத்தினால் (மாகேஷ்வர சூத்திரத்தில்) அ (अ) வர்ணத்துடன் உச்சரிக்கப்படுகின்ற ரேஃபம் ஆனது ( ரகாரம் என்று கூறப்படுவது இல்லை). ர (रँ) (ரேபம்) என்பது ர (र) மற்றும் ல (ल) விற்க்கு பெயர் ஆகின்றது.

இதனால் இந்த சூத்திரத்தினால் **லன்மத்யே த்வித்ஸம்ஞக** என்ற வாக்கியத்தினாலும் ல வில் (ल) உள்ள அ (अँ) ஆனது அனுநாசிக்கம் என்று அறியப்படுகின்றது.

29. उरण् रपरः 1/1/51।। (परिभाषा सूत्रम्)

अण् + ऋ / ऌ => अण् + र् / ल्

@ आदेशः 1/1/48

# उः [61], अण् [11], रँपरः [11], आदेशः [11] ।

* ऋ इति त्रिंशतः संज्ञेत्युक्तम्। तत्स्थाने योऽण् स रपरः सन्नेव प्रवर्तते। कृष्णर्धिः। तवल्कारः ।।

ரு (ऋ) என்பது 30 க்கும் பெயர் ஆகும். அதன் இடத்தில் எந்த அண் (अण्) வருகின்றதோ அது ர் (र्) மற்றும் ல் (ल्) பரத்தில் (தொடர்ந்து) உள்ளதாகவே ஆகின்றது.

உதாரணம்

**कृष्ण ऋद्धिः - कृष्ण् अ ऋ द्धिः - - गुण** மற்றும் **उरण् रपरः** வினால் अ **ऋ अर् - कृष्ण् अर् द्धिः - कृष्णर्द्धिः** ஆகும்.

**तव लृकारः - तव् अ लृ कारः - गुण** மற்றும் **उरण् रपरः** வினால் **अ ऋ अर् - तव् अल् कारः - तवल्कारः** ஆகும்.

30. लोपः शाकल्यस्य 8/3/19।। (विधि सूत्रम्)

अ **वर्णम्** + य् / व् + अश् => लोपः ( वा )

@ अपूर्वयोः, अशि 8/3/17, व्योः 8/3/18 ।

# अवर्णपूर्वयोः [62], पदान्तयोः [62], व्योः [62], लोपः [11], अशि [71], शाकल्यस्य [61] ।

* अवर्णपूर्वयोः पदान्तयोर्यवयोर् लोपो वाऽशि परे ।।

அ (अ) வர்ணம் பூர்வமாக இருக்கும் பொழுது பதாந்தத்தில் உள்ள ய் மற்றும் வ் (य् व्) மானது லோபம் ஆகலாம் இவை அஸ் (**अश्**) எழுத்து பரத்தில் உள்ளபோது. (விகல்பத்தில்)

உதாரணம்

**हर इह - ह र् अ इ ह - एचोऽयवायावः** வினால் **- हर् अय् इ ह -**

**ह र् अ य् इ ह - हर् अ य् इ ह - लोपः शाकल्यस्य** வினால்

1. **हर् अ इ ह - हर इह - वा** (விகல்பத்தில்)

2. हर् अ य् इ ह - हरयिह

विष्णो इह - विष्ण् ओ इ ह - एचोऽयवायावः வினால் - विष्ण् अव् इ ह -

विष्ण् अव् इ ह - विष्ण् अ व् इ ह - लोपः शाकल्यस्य வினால்

1. विष्ण् अ इ ह - विष्ण इह - वा (விகல்பத்தில்)

2. विष्ण् अ व् इ ह - विष्णविह

இங்கு ஹர இஹ (**हर इह**) - விஷ்ண இஹ (**विष्ण इह**) (ஆகும் என்றதின் படி) இவை வருகின்றது.

இதில் அ + இ என்று ஆகும் நிலையில் **ஆத் குண** சூத்திரத்தினால் குணம் ஆகும். ஆனால் இந்த சூழ்நிலையில் அடுத்த சூத்திரமான **பூர்வத்ராஸித்தம்** வருகின்றது. அதை பார்ப்போம்.

31. पूर्वत्रासिद्धम् 8/2/1।। (अधिकार सूत्रम्)

(1 – 7.1) – (7.2,3,4) / (7.2.1 . . . ) **पूर्वम्** --> **परम्** => **असिद्धम्**

# पूर्वत्रासिद्धम् [11] ।

* सपादसप्ताध्यायीं प्रति त्रिपाद्यसिद्धा त्रिपाद्यामपि पूर्वं प्रति परं शास्त्रमसिद्धं। हर इह, हरयिह। विष्ण इह, विष्णयिह ।।

7 1/4 அத்யாயத்திற்கு ( 7 அத்யாயம் மற்றும் 8 ஆம் அத்யாயத்தின் முதல் பாதம்) கடைசி மூன்று பாதம் அசித்தம் ஆகும்.

கடைசி மூன்று பாதத்திலும் கூட பூர்வ சூத்திரத்திற்க்கு பரத்தில் உள்ள

சூத்திரம் அசித்தம் ஆகும்.

இங்கு திரிபாதியில் (மூன்று பாதத்தில்) உள்ள சூத்திரத்தினால் உண்டான மாற்றம்மானது 7 1/4 அத்தியாயத்திற்க்கு அசித்தம் ஆகும்.

அது போல கடைசி மூன்று பாதத்திலும் கூட பர (கடைசி) சூத்திரம் பூர்வ சூத்திரத்திற்க்கு அசித்தம் ஆகும்.

இந்த சூத்திரத்தின் படி பின்வருபவன ஹர இஹ (**हर इह**) - விஷ்ண இஹ (**विष्ण इह**) இதே நிலையில் உள்ளது எப்படி என்றால்

**லோபஸாகல்யஸ்ய** 8. 3. 19 வால் நடந்த லோபம் ஆனது **ஆத்குண** 6. 1. 87 என்ற சூத்திரத்திற்க்கு தெரியாது ஏன் என்றால் **ஆதகுண** வின் சூத்திர எண் 6. 1. 87 இதன் காரணத்தால் **பூர்வத்ராஸித்தம்** -தின் படி இங்கு பதம் அப்படியே இருக்கும். (குணம் ஆகாமல்).

ஹர இஹ (**हर इह**) - விஷ்ண இஹ (**विष्ण इह**) என்று ரூபம்.

## 32. वृद्धिरादैच् 1/1/1।। (संज्ञा सूत्रम्)

आ / ऐ / औ => **वृद्धि संज्ञा**

\# आत् 11 , ऐच् 11 , वृद्धिः 11 ।

* आदैच् च वृद्धिसंज्ञः स्यात् ।।

ஆ (**आ**) மற்றும் ஐ, ஔ (ஐச்) (**ऐ औ**) விருத்தி (**वृद्धि**) என்ற பெயரை அடையும்.

## 33. वृद्धिरेचि 6/1/88।। (विधि सूत्रम्)

अ वर्ण + एच् => वृद्धि

@ आत् 6/1/87, एकः 6/1/84।

# आत् [51] , ऐचि [71] , पूर्वपरयोः [62], एकः [11] , वृद्धिः [11]।

* आद् एचि परे वृद्धिर् एकादेशः स्यात्। गुणापवादः। कृष्णैकत्वम्। गङ्गौघः। देवैश्वर्यम्। कृष्णौत्कण्ठ्यम् ॥

அ (अ) வர்ணத்தினை தொடர்ந்து ஏச் (एच्) வரும் பொழுது விருத்தி ஆனது ஏகாதேசமாக வரும்.

இது குண சூத்திரத்திற்க்கு அபவாதம் இங்கு குண சூத்திரத்தில் அ (अ) வர்ணத்தை தோடர்ந்து அச் (अच्) எழுத்து வந்தால் குணம் ஆகும் என்று சொல்லப்பட்டது அச் என்ற சொல் **இகோயணசி** என்ற சூத்திரத்தில் இருந்து அனுவிருத்தி ஆகின்றது. குணம் ஆனது அக் (अक्) வரை உள்ள எழுத்துகளை மட்டும் தொடர்ந்து வரும்.

என்பதால் சூத்திரத்தினில் *லாகவம்* (எழுத்துக்குறைப்பு) காரணமாக அச் என்றே கூறப்பட்டது. இதனால் இந்த சூத்திரத்தில் அதற்க்கு அபவாதம் உண்டாகின்றது.

உதாரணம்

1. कृष्ण एकत्वम् – कृष्ण् अ ए कत्वम् – वृद्धिरेचि வினால் – कृष्ण् ऐ कत्वम् – कृष्णैकत्वम्

2. गङ्गा ओघः – गङ्ग् आ ओ घः – वृद्धिरेचि வினால் – गङ्ग् औ घः – गङ्गौघः

3. देव ऐश्वर्यम् - देव् अ ऐ श्वर्यम् - वृद्धिरेचि வினால் - देव् ऐ श्वर्यम् - देवैश्वर्यम्

4. कृष्ण औत्कण्ठ्यम् - कृष्ण् अ औ त्कण्ठ्यम् - वृद्धिरेचि வினால் - कृष्ण् औ त्कण्ठ्यम् - कृष्णौत्कण्ठ्यम् ॥

34. एत्येधत्यूठ्सु 6/1/89।। (विधि सूत्रम्)

अ वर्ण + एजादि [एति , एधति & ऊठ् ] => वृद्धि

@ आद् 6/1/87, एजाद्योः, वृद्धिः 6/1/88।

# आद् 51 , एजाद्योः 72 , एत्येधत्यूठ्सु 73 , पूर्वपरयोः 62, एकः 11 , वृद्धिः 11।

* अवर्णाद् एजाद्योरेतेधत्योर् ऊठि च परे वृद्धिर् एकादेशः स्यात्। पररूपगुणापवादः। उपैति। उपैधते। प्रष्ठौहः। एजाद्योः किम् उपेतः। मा भवान् प्रेदिधत्। (अक्षादूहिनाम् उपसंख्यानम्) अक्षौहिणी सेना। (प्रादूहोढोढ्येषैष्येषु) प्रौहः। प्रौढः। प्रौढिः। प्रैषः। प्रैष्यः। ( ऋते च तृतीयासमासे ) सुखेन ऋतः सुखार्तः। तृतीयेति किम् परमर्तः। (प्रवत्सतरकम्बलवसनार्णदशानामृणे) प्रार्णं वत्सतरार्णम् इत्यादि ।।

அ (अ) வர்ணத்தினை தொடர்ந்து ஏச் (एच्) ஆதியான ***இண் கதௌ*** (தாது) (इण गतौ .செல்லுதலில்) மற்றும் ஏத வ்ருத்தௌ என்ற தாது (एध वृद्धौ - வளர்ச்சியில்) மற்றும் ஊட் (ऊठ्) பரத்தில் இருக்கும்பொழுது பூர்வம் மற்றும் பரத்திற்க்காக ஏகாதேசமாக விருத்தி ஆகும்.

ஊட் (ऊठ्) என்பது இங்கு **வா: ஊட்** என்ற சூத்திரத்தினால் நடக்கும் மாற்றம் கூறப்படுகின்றது.

இங்கு விருத்தியில் கொடுக்கப்பட்ட கூடுதல் சொற்களின் விசாரம் செய்யப்படுகின்றது. இதனை பதக்கிருத்தியம் என்பர் .

एजाद्यो: என்றால் என்ன उपेत: என்ற இடத்தில் விருத்தி ஆகவில்லை என்று அறியவும், அதுபோல प्रेदिधत् என்ற இடத்திலும் விருத்தி ஆகவில்லை.

**வார்த்திகம் -1**

அக்ஷா (अक्षा) என்ற சொல்லினை தொடர்ந்து ऊहिनि என்ற சொல் வரும் பொழுது அதுவும் எண்ணிக்கையில் - விருத்தி ஆகும்.

अक्षा ऊहिनि - अक्षौहिनि

**வார்த்திகம் -2**

ப்ரா (प्रा) வை தொடர்ந்து ऊह , ऊठ् , ऊढि , एष மற்றும் एष्य - விருத்தி ஆகும்.

प्रा ऊहः - प्रौहः ॥ प्रा ऊठः - प्रौठः ॥ प्रा ऊढि - प्रौढि ॥ प्रा एषः - प्रैषः ॥ प्रा एष्यः - प्रैष्यः ॥

**வார்த்திகம் -3**

ऋतः என்ற சொல் இருக்கும் போது திருத்தியா சமாசத்திலும் வரும்.

सुखेन ऋतः - सुखेन् अ ऋ तः - वृद्धिरेचि மற்றும் उरण् रपरः - सुख् आर् तः - सुखार्तः ॥

பத கிருத்தியத்தில் திருத்தியம் என்று ஏன் சொல்லப்பட்டது

परम ऋतः - परम् अ ऋ तः - आद् गुणः மற்றும் उरण् रपरः - परम् अर्

तः - परमर्तः ॥

**வார்த்திகம் -4**

**प** , **वत्सतर** , **कम्बल** , **वसन** , **ऋण** மற்றும் **दश** முதலிய சொல் சேரும் போது **ऋ** என்ற சொல் விருத்தி ஏகாதேசமாக வரும்.

**प्र ऋणम् - प्र् अ ऋ णम् - वृद्धिरेचि** மற்றும் **उरण् रपरः - प्रार्णम्**

**वत्सतर ऋणम् वत्सतर् अ ऋ णम् वृद्धिरेचि** மற்றும் **उरण् रपरः - वत्सतरार्णम्**

இந்த வார்த்திகங்கள் எல்லாம் **ஆத் குண** என்ற சூத்திரத்திற்க்கு அபவாதம் ஆகும்.

35. उपसर्गाः क्रियायोगे 1/4/59।। (संज्ञा सूत्रम्)

प ... उप => **उपसर्ग संज्ञा**

@ प्रादयः 1/4/58।

# प्रादयः [13] , क्रियायोगे [13] , उपसर्गाः [71]।

* प्रादयः क्रियायोगे उपसर्गसंज्ञाः स्युः। प्र परा अप सम अनु अव निस् निर् दुस् दुर् वि आङ् नि अधि अपि अति सु उत् अभि प्रति परि उप - एते प्रादयः ।।

ப்ர (प्र) முதலியவை வினைவுடன் கூடும் போது (சம்மந்தப்படும் பொழுது) உபசர்கம் என்ற பெயரினை அடைகின்றன. இவை 22 வகைப்பட்டது.

உதாரணம்

षद्लृ गतौ (செல்லுதலில்)

नि + षद् = निषद्

उप + निषद् = उपनिषद्

இங்கு நி (नि) மற்றும் உப (उप) உபசர்கம் சேர்ந்து உபநிஷத் என்கிற சொல் உண்டாயிற்று.

36. भूवादयो धातवः 1/3/1।। (संज्ञा सूत्रम्)

भू , वा . . . => धातु संज्ञा

# भूवादयः [13] , धातवः [13] ।

* क्रियावाचिनो भ्वादयो धातुसंज्ञाः स्युः ।।

பூ (भू) முதலியவை வினைசொற்களுக்கு தாது என்ற பெயர் அடைகின்றது.

உதாரணம்

இங்கு भू सत्तायाम् (இருத்தலில்) மற்றும் वा गतिगन्धनयोः (செல்லுதலில் , வாசனை) முதலியவற்றிர்க்கு தாது என்ற பெயர் ஆகட்டும் என்பது அபிப்பிராயம்.

37. उपसर्गादृति धातौ 6/1/91।। (विधि सूत्रम्)

अ वर्णान्त उपसर्ग + ऋ आदि धातु => वृद्धि

@ आद् 6/1/87, एकः 6/1/84, वृद्धिः 6/1/88।

# आद् [51] , उपसर्गाद् [51], ऋति [71] , धातौ [71] , पूर्वपरयोः [62], एकः [11], वृद्धिः [11] ।

* अवर्णान्ताद् उपसर्गाद् ऋकारादौ धातौ परे वृद्धिर् एकादेशः स्यात्। प्रार्छति ।।

அ (अ) வர்ணம் அன்தமாக உடைய உபசர்கத்தினை தொடர்ந்து ர்ரு (ऋ) ஆதியாக உடைய தாது வந்ததானால் அவைக்கு விருத்தி ஏகாதேசமாக வரும்.

உதாரணம்

**प्र ऋच्छति - प्र् अ ऋ च्छति - वृद्धिरेचि** மற்றும் **उरण् रपरः - प्राच्छर्ति**

இந்த சூத்திரம் **आद् गुणः** சூத்திரத்தின் அபவாத சூத்திரம் ஆகும்.

38. एङि पररूपम् 6/1/94।। (विधि सूत्रम्)

<u>अ वर्णान्त उपसर्ग + एङ् आदि धातु</u> => **पररूपम्**

@ आद् 6/1/87, एकः 6/1/84, उपसर्गाद् 6/1/91।

# आद् [51] , उपसर्गाद् [51], एङि [71] , धातौ [71] , पूर्वपरयोः [62], एकम् [11], पररूपम् [11] ।

* आद् उपसर्गाद् एङादौ धातौ परे पररूपम् एकादेशः स्यात्। प्रेजते। उपोषति ।।

அ (अ) வர்ணத்தினை அந்தமாகவுடைய உபசர்கத்தை தொடர்ந்து ஏ அல்லது ஓ (ए ओ) ஆதி தாது வந்தால் அவை பரரூபமாக வரும். அதாவது ஏ, ஓ ஏகாதேசமாக வரும்.

உதாரணம்

1. प्र एजते - प्र् अ ए जते - प्रेजते

2. उप ओषति - उप् अ ओ षति - उपोषति

இந்த சூத்திரம் **वृद्धिरेचि** என்ற சூத்திரத்திற்க்கு அபவாதம் ஆகின்றது. **इण, एध** தாது விஷயத்தில் **एत्येधत्यूठ्सु** இந்த சூத்திரத்திற்கு அபவாதம் ஆகும்.

## 39. अचोऽन्त्यादि टि 1/1/64॥ (संज्ञा सूत्रम्)

**अन्त्य अच्** + . . . => **टि संज्ञा**

# अचः [61] , अन्त्यादि [11] , टि [11] ।

* अचां मध्ये योऽन्त्यः स आदिर्यस्य तट्टिसंज्ञं स्यात्। (शकन्ध्वादिषु पररूपं वाच्यम्) तच् च टेः। शकन्धुः। मनीषा। आकृतिगणोऽयम् मार्तण्डः ॥

அச் (अच्) எழுத்துக்கு இடையில் எது கடைசியோ அது எந்த எழுத்துக்களுக்கு முதல் எழுத்து ஆகின்றதோ அவைகளுக்கு டி (टि) என்ற பெயர் ஆகின்றது.

உதாரணம்

1. **राम - आ अ** அச் எழுத்துக்கள் - **अ** டி (டி) என்ற பெயர் அடைகின்றது.

2. **कृष्णन् - ऋ अ** அச் எழுத்துக்கள் - **अन्** டி (டி) என்ற பெயர் அடைகின்றது.

3. **अरविन्द् - अ अ इ** அச் எழுத்துக்கள் - **इन्द्** டி (டி) என்ற பெயர் அடைகின்றது.

**வார்த்திகம்**

**शकन्धु** முதலியவற்றிக்கு பரரூபம் கூறப்பட வேண்டும்.

**मनर् ईषा - मन् अर् ई षा** அர் என்பது டி சம்ஞா ஆகும். இந்த வார்த்திகத்தினால் பரரூபம் ஆகின்றது. அதனால் என்று **मनीषा** ரூபம்

காரியத்தினை கண்டு எந்த சம்மந்தம் உண்டாகின்றதோ **आकृतिगणम्** எனப்படுகின்றது.

இங்கு **मार्त्तण्डः** என்ற சப்தம் **शकन्धु** முதலிய சப்தத்தில் இல்லாததிருந்தாலும் பரரூபம் உண்டாகின்றது. **मृत्त** + **अण्डः** இங்கு டி ஸ்தானத்தில் பரரூபம் என்ற அ வருவதினால் **मृत्तण्डः** ஆதிவிருத்தி ஆகின்றது **मार्त्तण्डः** என்று ஆகும்.

## 40. ओमाङोश्च 6/1/95॥ (विधि सूत्रम्)

**अ वर्ण + ओम् / आङ् उपसर्ग => पररूपम्**

@ आद् 6/1/87, एकः 6/1/84, पररूपम् 6/1/94।

# आद् [51] , ओमाङोः [72], च [0] , पूर्वपरयोः [62], एकः [11], पररूपम् [11] ।

* ओमि आङि चाऽऽत् परे पररूपम् एकादेशः स्यात्। शिवायों नमः। शिव+एहि ॥

ஓம் (**ओम्**) மற்றும் ஆங் (**आङ्**) , **अ** வர்ணத்தினை தொடர்ந்து வரும் பொழுது அவை பரரூபம் ஏகாதேசமாக அடையும்.

**शिवाय ओम् नमः - शिवायों नमः**

41. अन्तादिवच्च 6/1/85।। (परिभाषा सूत्रम्)

(पूर्व + [ अल् ) + **परम्** ] => **अन्तम्** , **आदि**

@ एकः 6/1/84 ।

# एकः [11], पूर्वपरयोः [62], अन्तादिवत् [0] , च [0] ।

* योऽयम् एकादेशः स पूर्वस्यान्तवत् परस्यादिवत्। शिवेहि ॥

ஏகாதேசமாக எது உள்ளதோ அது பூர்வத்திற்கு அன்தமாயும் பரத்திற்கு ஆதியும் போல் ஆகும்.

**शिव एहि**

இங்கு **एहि** ஆனது **आङ्** உபசர்கத்துடன் **इहि** சேர்வதனால் உண்டானது. என்பதால் **ओमाङोश्च** சூத்திரத்தின்படி பரரூபம் ஏகாதேசம் ஆவதால் **शिवेहि** என்ற ரூபம் ஆகின்றது.

இங்கு ஒரு அக்ஷரம் உள்ள வர்ணத்தில் **வ்யபதேசிவத் பாவ**

என்கின்ற நியமித்தினால் அந்த ஒரு எழுத்தே (இங்கு आङ् ) தனக்கு ஆதியாகவும், அன்தமாகவும் அகின்றது. என்பதால் இரண்டு பக்கங்களும் இது உபயோகப்படுத்தப்படும்.

## 42. अकः सवर्णे दीर्घः 6/1/101।। (विधि सूत्रम्)

अक् + सवर्ण अच् => दीर्घम्

@ अचि 6/1/77, एकः 6/1/84 ।

# अकः [51] , सवर्णे [71], अचि [71], पूर्वपरयोः [62], एकः [11], दीर्घः [11] ।

* अकः सवर्णेऽचि परे पूर्वपरयोर् दीर्घ एकादेशः स्यात्। दैत्यारिः। श्रीशः। विष्णूदयः। होतृकारः ।।

அக் (अक्) ஆனது ஸவர்னம் ஆன அச் (अच्) தொடர்ந்து வரும்பொழுது பூர்வம் மற்றும் பரத்திற்க்காக தீர்க்கம் ஏகாதேசமாக வரும்.

உதாரணம்

1. दैत्य अरिः - दैत्य् अ अ रिः - अ + अ = आ - दैत्यारिः
2. श्री ईश - श्र् ई ई श - ई + ई = ई - श्रीश
3. विष्णु उदयः - विष्ण् उ उ दयः - उ + उ = ऊ - विष्णूदयः

## 43. एङः पदान्तादति 6/1/109।। (विधि सूत्रम्)

एङ् + अत् => पूर्वरूपम्

@ पूर्वः 6/1/107, एकः 6/1/84 ।

# अति [71] , पदान्ताद् [51], एङः [51], पूर्वपरयोः [62], एकः [11], पूर्वः [11] ।

* पदान्ताद् एङोऽति परे पूर्वरूपम् एकादेशः स्यात्। हरेऽव। विष्णोऽव ।।

பதான்தமான ஏங் (एङ्) -கினை தொடர்ந்து அத் (अत्) வரும் என்றால் அது பூர்வரூபம் ஏகாதேசமாக வரும். இந்த சூத்திரம் **एचोऽयवायावः** -ற்க்கு அபவாதம் ஆகும்.

உதாரணம்

1. **हरे अव - हर् ए अ व - हरेव** அல்லது **हरेऽव**
2. **विष्णो अव - विष्ण् ओ अ व - विष्णोव** அல்லது **विष्णोऽव**

44. सर्वत्र विभाषा गोः 6/1/122।। (विधि सूत्रम्)

**एङन्त गो + अत् => प्रगृह्यम् (वा)**

@ अति , पदान्ताद् , एङः 6/1/109, प्रकृत्या 6/1/115 ।

# सर्वत्र [0] , पदान्तस्य [61], एङः [61], गोः [61] , अति [71] , विभाषा [11], प्रकृत्या [31] ।

* लोके वेदे च चैङन्तस्य गोर् अति वा प्रकृतिभावः पदान्ते। गो अग्रम्। गोऽग्रम्। एङन्तस्य किम् चित्रग्वग्रम्। पदान्ते किम् गोः ।।

லௌகிகத்தில் (உலகத்தில்) மற்றும் வைதிகத்திலும் (வேதத்தில்) சொற்களின் ஏங் (एङ्) அன்த , பதான்த கோ (गो) - வினை தொடர்ந்து அத் (अत्) வரும் பொழுது விகல்பத்துடன் பிரகிருதி பாவம் (தன்மை) ஆகும்.

**चित्रगु अग्रम्** என்னும் இடத்தில் **एङ्** அன்த **गो** சப்தம் இல்லாததினால் **चित्रग् उ अ ग्रम् - इको यणचि** வினால் **चित्रग्वग्रम्** என்று ரூபம்.

பதான்தத்தில் **गो अस् - गोः** என்று ரூபம்.

## 45. अनेकाल् शित् सर्वस्य 1/1/55।। (परिभाषा सूत्रम्)

**अनेक् अल् & शित्** => **सर्वस्य आदेशः**

@ आदेशः 1/1/48 ।

# अनेकाल् [11] , शित् [11], सर्वस्य [61], आदेशः [11] ।

* इति प्राप्ते ।।

அனேக அல் (अल्) உடையதாக இருந்தாலும் ஷ்₂ இத் (श् इत्) உடையதாக இருந்தாலும் அந்த ஆதேசமானது கொடுக்கப்பட்ட சஸ்டி (ஆறாம் வேற்றுமை) ஸ்தானத்தில் முழுவதுமாக ஆகும்.

இந்த சூத்திரம் **अलोन्त्यस्य** என்ற சூத்திரத்திற்க்கு அபவாதம் ஆகும்.

உதாரணம்

गो अग्रम् என்ற நிலையில் गो விற்க்கு अवङ् ஆதேசமாக வரும் பொழுது இந்த சூத்திரத்தின் படி முழுவதுமாக வரும் என்பதால் अव अग्रम् (இங்கு हलन्त्यम् காரணமாக ङ् லோபம் (लोपम्) ஆகும்) அப்படி என்றால் இங்கு अवाग्रम् என்ற ரூபம் அடைகின்றது . இந்த நிலையில் அடுத்த சூத்திரம் சொல்கின்றது.

